## நாணயச் சபை

## இலங்கை மத்திய வங்கி

**2018 திசெம்பர் 03 நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 08ஆம் இலக்கம்**

---

### நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் நுண்பாக நிதிக் கம்பனிகள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் தொடர்பில் பணிப்புரைகளை விடுத்திருக்கிறார்.

| | | |
|---|---|---|
| 1. பிரயோகத்தன்மையும் செயற்பரப்பும் | 1.1 | சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக்கடன் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மீது மிக கடுமையான வட்டி வீதம் விதிக்கப்பட்டு வருவதிலிருந்தும் அவர்களை பாதுகாக்கும் குறிக்கோளுடன் மத்திய வங்கி நுண்பாக நிதிக் கடன்கள் மீதான வட்டியின் மீது உயர்ந்தபட்ச வீதமொன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது. |
| | 1.2 | இப்பணிப்புரையானது, இப்பணிப்புரையின் திகதியிலிருந்து வழங்கப்பட்ட அனைத்து நுண்பாக நிதிக் கடன்களுக்கும் ஏற்புடையதானதாக இருக்கும். |
| 2. வட்டியின் உயர்ந்தபட்ச வீதம் | 2.1 | சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்கள் மீது மற்றைய அனைத்து விதிப்புக்களும் உட்பட ஆண்டொன்றிற்கு 35 சதவீதத்தினை விஞ்சுகின்ற விதத்தில் விதிப்புக்கள் எதனையும் விதித்தலாகாது. |
| 3. நுண்பாக நிதிக் கடன்களின் வரைவிலக்கணம் | 3.1 | நுண்பாக தொழில்முயற்சிகளை உருவாக்குகின்றமை மற்றும் முகாமைப்படுத்துகின்றமைக்கான கடன்கள் உட்பட, வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்கு/ குழும கடன் வழங்கல் முறைமையின் கீழ் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள். |
| 4. அறிக்கையிடும் தேவைப்பாடுகள் | 4.1 | சிறப்பியல்புவாய்ந்த நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்களை, குறியீடு 3.1.4.9.0.0 - நிதியியல் தகவல் வலையமைப்பிலுள்ள நுண்பாக நிதிக் கடன்கள் (பின்நெட்) கூற்று என்பீஎல்-எம்எவ்-03-பீஎஸ் ஐந்தொகையின்கீழ் அறிக்கையிடுதல் வேண்டும். |
| 5. விளக்கங்கள் | 5.1 | “நுண்பாக தொழில்முயற்சிகள்” என்பது ரூ.15 மில்லியனுக்குக் குறைவான வருடாந்த மொத்தப் புரள்வினையும் 10 இற்கும் குறைவான ஊழியர்களையும் கொண்டுள்ள தயாரிப்பு மற்றும் பணிகள் துறையிலுள்ள தொழில்முயற்சிகள் எனப் பொருள்படும். (மூலம்: கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் வழங்கப்பட்ட சிறிய, நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு). |

டபிள்யு. ரணவீரா
பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி